(2021)2 S.C.R 63

இந்திய உச்ச நீதிமன்றம்

2021-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ஆம் நாள்

முன்னிலை

(மாண்புமிகு நீதியரசர் திரு .அசோக் பூஷன், ஆர்.சுபாஷ் ரெட்டி மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு .எம்.ஆர்.ஷா, ஜே.ஜே)

(குற்றவியல் மே ல்முறையீட்டுண்கள். 100-101/2021)

என். விஜயகுமார்

எதிர்

தமிழ்நாடு மாநில அரசு

ஊழல் தடுப்பு சட்டம், 1988 – சட்டப்பிரிவுகள் 7, 13 (2) உ/இ 13 (1) (டி)- மேல்முறையீட்டாளர் - குற்றம் சாட்டப்பட்டவர் மதுரை மாநகராட்சியின் 8வது வார்டில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்துள்ளார் - அரசு தரப்பு வழக்கு படி தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணியாற்றும் அ.சா.2 மேற்படி வார்டில் சுகாதார பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தத்தின் படி பணி நீட்டிப்புக்காக தனது அறிக்கையை அனுப்ப குற்றஞ்சாட்டப்பட்டவரை தொடர்பு கொண்டபோது குற்றம்சாட்டப்பட்டவர்

அ.சா.2-இடம் சட்ட விரோதமாக பணம் ரூ.500/- மற்றும் கைபேசி கேட்டதாக - விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்துள்ளது - மேற்படி விடுதலை உயர்நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது - மேல்முறையீட்டில் சொல்லப்பட்டவை: சாட்சியங்களில் சாட்சியத்தில் கருப்பொருள் தொடர்பான பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன - சட்டவிரோதமான பணம் மற்றும் கைபேசி கையூட்டு என்று தெரிந்து தான் குற்றம்சாட்டப்பட்டவர் வாங்கினார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி

நிரூபிக்கப்படவில்லை – பணம் மற்றும் பொருள் கைப்பற்றியது மட்டுமே அடிப்படை ஆதாரமாக கருதி இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிப்பதற்கு போதுமானதாக இல்லை - விசாரணை நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவித்ததுக்கு சாத்தியக்கூறு உள்ளது- உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது - கு.வி.மு.ச.பிரிவு 1973- எஸ்.378.

மேல்முறையீட்டை நீதிமன்றம் அனுமதித்தது.

முடிவு : 1.1 அ.சா.2 இவ்வழக்கில் முக்கிய சாட்சியாவார். மேல்முறையீட்டாளர் மீது வழக்கு தொடர அனுமதி வழங்கிய அனுமதி வழங்கும் அதிகாரி அ.சா.1 ஆகவும், புகார்தாரர் அ.சா. 2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.2,3,5 மற்றும் 11 வரையான சாட்சிகள் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில் தாங்கள் 10.10.2003-ஆம் தேதி மாலை 05.30 மணிக்கு எதிரியின் அலுவலகத்தை அடைந்தோம் என்றும், அந்த நேரத்தில் எதிரி தனது இருக்கையில் இல்லை என்றும், தாங்கள் அவருக்காக காத்திருந்தோம் என்றும், அப்போது எதிரி/மேல்முறையீட்டாளர் இருசக்கர வாகனத்தில் அலுவலகத்திற்கு

மாலை 05.45 மணிக்கு வந்து தனது இருக்கையில் அமர்ந்துள்ளார் என கூறியுள்ளார்கள். மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில் தான் மற்ற சாட்சிகளுடன் எதிரி/மேல்முறையீட்டாளரை சந்தித்த போது அவர் தன்னிடம் ரூ.500/- மற்றும் கைபேசி கேட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் எதிரி/மேல்முறையீட்டாளர் தன்னிடம் பணம் கேட்டதன் பேரில் தான் பினாப்தலீன் பவுடர் தடவிய பணம் மற்றும் கைபேசியை எதிரி/மேல்முறையீட்டாளரிடம் கொடுத்ததாகவும் அதை பெற்றுக்கொண்ட எதிரி/மேல்முறையீட்டாளர் அதை தனது மேசையில் இருந்த இடது புற அறையில் வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அதிகாரபூர்வ சாட்சி அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். இவர் தனது நீதிமன்ற விசாரணையில் தாங்கள் எதிரி/மேல்முறையீட்டாளர் அலுவலகத்திற்கு சென்ற போது எதிரி/மேல்முறையீட்டாளர் தனது இருக்கையில் இல்லை என்றும், அவருக்காக தாங்கள் காத்திருந்ததாகவும், எதிரி/மேல்முறையீட்டாளர் மாலை 05.45 மணிக்கு அலுவலகத்திற்கு வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 தனது சாட்சியத்தில் இதற்கு முன்பே பல தடவை தான் எதிரி/மேல்முறையீட்டாளரை சந்தித்துள்ளதாகவும், 09.10.2003-ஆம் தேதி அ.சா.5 உடன் சென்று எதிரி/மேல்முறையீட்டாளரை சந்தித்தபோது தான் அவர் தன்னிடம் சட்டத்திற்கு புறம்பாக பணம் ரூ.500/- மற்றும் கைபேசியை கேட்டார் என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் இதற்கு முன்பு தான் எப்போதும் எதிரி/மேல்முறையீட்டாளரை பார்த்தது இல்லை என்றும், 09.10.2003-ஆம்

தேதி அன்று தான் முதல் தடவையாக பார்த்தபோது தன்னிடம் அவர் பணம் மற்றும் கைபேசி கேட்டதாக கூறியுள்ளார். மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர் என்பதால் பலமுறை எதிரி/மேல்முறையீட்டாளர் தன்னை மோசமாக நடத்தியதாகவும் தெளிவாக சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி அ.சா.2-இன் சாட்சியத்திலிருந்து எதிரி/மேல்முறையீட்டாளர் மற்றும் அ.சா.2-க்கு இடையே சுமூகமான நிலை இல்லை என்பது தெரிகிறது. மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் தானும் தன்னுடன் வந்தவரும் சம்பவத்தன்று எதிரி/மேல்முறையீட்டாளரிடம் பணம் மற்றும் கைபேசியை கொடுத்து விட்டு உடனடியாக அலுவலகத்தை விட்டு வெளியே வந்து காவல் ஆய்வாளருக்கு சமிக்ஞை கொடுத்ததாக கூறியுள்ளார். மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் வழக்கு சொத்து-2(சா.பொ.2) ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள கைபேசி வாங்கியது தொடர்பாக தன்னிடம் எந்த ஆவணங்களும் இல்லை என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி அ.சா.2-இன் சாட்சியத்திலிருந்து எதிரி/மேல்முறையீட்டாளரை மாலை 05.45 மணியிலிருந்து பொறி வைத்து பிடிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால், இவ்வழக்கில் பினாப்தலீன் சோதனையானது இரவு 07.00 மணிக்குத்தான் நடத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், இவ்வழக்கில் மாலை 05.45 மணியிலிருந்து 07.00 மணி வரையான காலதாமத்திற்கான எந்த விளக்கங்களும் இவ்வழக்கில் சாட்சிகளால் அளிக்கப்படவில்லை. நகர சுகாதார உதவி அலுவலகம் மற்றும் மற்ற துறை அலுவலகங்களும், எதிரி/மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தின்

அருகிலேயே உள்ளது. மேலும் அ.சா.3 தனது சாட்சியத்தில் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தனது மேசையின் அறையில் இருந்த பணம் மற்றும் கைபேசியை எடுத்து ஒப்படைத்தார் என்று கூறியுள்ளார். இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வட்ட சுகாதார ஆய்வாளர், மதுரை மாநகராட்சி அவர்கள் தனது குறுக்கு விசாரணையில், எதிரி/மேல்முறையீட்டாளர் அலுவலகம் செல்லும் வரை தனக்கு எது பற்றியும் தெரியாது என்றும், பணம் மற்றும் கைபேசி யாரிடமிருந்தது என்பது தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். மேலும், இவர் தனது குறுக்கு விசாரணையில் காவல் ஆய்வாளர் கொடுத்த அறிவுரையின் பேரில் தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தன்னிடம் இருந்த பணம் மற்றும் கைபேசியை வெளியே எடுத்தார் என்று கூறியுள்ளார். அ.சா.5-இன் சாட்சியமும் மேற்படி சாட்சியத்தை ஒத்தே உள்ளது.

அ.சா.11 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், போடிநாயக்கனூர் உட்பிரிவு அவர்கள் இவ்வழக்கில் மற்றொரு முக்கிய சாட்சியாவார். இவர் சம்பவ சமயத்தில் மதுரை ஊழல் மற்றும் லஞ்ச தடுப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றியுள்ளார். இவர் தனது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளரிடம் சோடியம் கார்பனேட் திரவ சோதனையானது இரவு 07.00 மணிக்கு நடத்தப்பட்டதாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான அ.சா.2,3,5 மற்றும் அ.சா.11 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளரை பொறி வைத்தது மாலை 05.45 மணி என்றும், ஆனால் மேற்படி சோதனை நடைபெற்றது இரவு 07.00 மணி என்றும்,

ஒரே மாதிரி சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும், அ.சா.11 தனது குறுக்கு விசாரணையில் தாங்கள் சம்பவ இடத்தை சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே கண்காணிக்க தொடங்கி விட்டதாகவும் எதிரி/மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தில் இருந்து பொதுமக்கள் பல பேர் வருவதும் போவதுமாக இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் தனது சாட்சியத்தில் பினாப்தலீன் சோதனை நிறைவடைந்த பிறகு ஊழல் கையேடு விதி 47(1)-இன் கீழ் சொல்லப்பட்டவாறு எதிரி/மேல்முறையீட்டாளரிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

மேலும், அ.சா.11 தனது குறுக்கு விசாரணையில் எதிரி/மேல்முறையீட்டாளரிடம் இருந்து பணம் மற்றும் கைபேசி பெறப்பட்ட பிறகு எதிரி/மேல்முறையீட்டாளரின் கைகள் உடனடியாக பரிசோதிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார். மேலும் அ.சா. 4 மற்றும் அ.சா.11 ஆகியோர் தங்களது சாட்சியங்களில் டி.எல்.ஓ. கேட்ட பிறகு தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தனது மேசையின் இடது அறையில் இருந்த கையூட்டு பணம் மற்றும் கைபேசியை எடுத்துக் கொடுத்தார் என்று கூறியுள்ளார்கள். மேற்படி சூழ்நிலைகளில் வழக்கின் முக்கிய ஆதாரங்கள் நம்பகமானதாக இல்லாத போது கறை படிந்த பணத்தை மீட்டெடுப்பது மட்டுமே எதிரி/மேல்முறையீட்டாளரை தண்டிப்பதற்கு உகந்ததாக இருக்காது. மேற்படி வழக்கில் கருப்பொருள் தொடர்பான முரண்பாடுகள் சாட்சிகளின் சாட்சியத்திற்கிடையே காணப்படுவதால் சந்தேகத்தின் பலன் எதிரிக்கு வழங்கப்படுகிறது. சாட்சிகளுக்கிடையேயான கருப்பொருள் முரண்பாடு தான் கீழமை

நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்ய வாய்ப்பாக அமைந்துள்ளது மற்றொரு விதத்தில் சொல்ல வேண்டுமானால் இந்த தீர்ப்பில் எதிரிக்கு நீதிமன்றம் வழங்கியுள்ள விடுதலையை மாற்றி தண்டனை வழங்குவதற்கான எந்த அடிப்படை காரணங்களும் இவ்வழக்கில் இல்லை.

மேலும், இவ்வழக்கில் ஆய்வு அலுவலர் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளரின் அலுவலகத்திற்கு சென்றபோது அவர் தனது அலுவலகத்தில் இல்லை என்றும், அந்த சமயத்தில் அலுவலகம் திறந்திருந்தது என்றும், அந்த அலுவலகத்திற்குள் பொதுமக்கள் போவதும், வருவதுமாக இருந்தார்கள் என்றும் கூறியுள்ளார்கள். மேலும், அ.சா.3 மற்றும் அ.சா.5 மற்றும் அ.சா.11 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளர் தனது மேசையின் அறையில் இருந்த பணம் மற்றும் கைபேசியை எடுத்துக் கொடுத்தார் என்று மட்டும் கூறியுள்ளார்கள். மேற்படி கறைபடிந்த நோட்டு மற்றும் கைபேசியை மாலை 05.45 மணிக்கு எதிரி/மேல்முறையீட்டாளரிடம் கொடுக்கப்பட்டதற்கான காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. மேலும் அ.சா.11-ஆல் இரவு 07.00 மணி வரை எதிரி/மேல்முறையீட்டாளர் சோதனை செய்யப்படவில்லை. மேற்படி சாட்சிகளின் சாட்சியத்தில் கருப்பொருள் முரண்பாடு காணப்படுகிறது. மேலும், அ.சா.2-இன் சாட்சியத்திலிருந்து அவர் எதிரி/மேல்முறையீட்டாளர் மீது விரோதத்தை வளர்த்து கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும், அ.சா.2 தனது குறுக்கு

விசாரணையில் எதிரி/மேல்முறையீட்டாளர் தான் தாழ்த்தப்பட்ட சாதி என்பதால் எதிரி/மேல்முறையீட்டாளர் தன்னை அவமானப்படுத்தியதாக கூறியுள்ளார்.

மேலும், இவ்வழக்கில் கறை படிந்த ரூபாய் மற்றும் கைபேசி ஒப்படைக்கப்பட்டு சில மணி நேரங்கள் வரை ஏன் பினாப்தலீன் பரிசோதனை அ.சா.11-ஆல் நடத்தப்படவில்லை என்பது குறித்து அ.சா.11 பதில் எதுவும் அளிக்கவில்லை. இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றம் அ.சா.2, 3 மற்றும் 5 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பத்தகுந்தவை அல்ல என்பதற்கு பல்வேறு காரணங்களை குறிப்பிட்டுள்ளது. ஆனால், உயர் நீதிமன்றம் இதை கருத்தில் கொள்ளாமலும், சாட்சிகளின் சாட்சியங்களை உரிய முறையில் ஆராயாமலும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றியுள்ளது. மேலும், உயர்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் எடுத்த பார்வை சரியானது தானா இல்லையா என்பது குறித்து எந்த பதிவும் இல்லை. இவ்வழக்கை பொறுத்தவரை உயர் நீதிமன்றம் அ.சா. 2, 3, மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பத்தகுந்தவை என்று முடிவு செய்துள்ளது என்பதால் தான் விசாரணை நீதிமன்றம் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் நம்பத்தகுந்தது அல்ல என்று முடிவு செய்து எதிரி/மேல்முறையீட்டாளரை விடுதலை செய்துள்ள தீர்ப்பை மாற்றி சொல்லியுள்ளது. மேலும், இவ்வழக்கில் எதிரிக்கு தண்டனை வழங்கும் வகையில் அரசு தரப்பு தன் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை. (பத்தி 9, 71-C-H; 72-A-H; 73-A-B; 77-A-G).

1.2 வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுள்ளது என்பதை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றத்தை அரசு தரப்பு நிரூபித்து விட்டதாக கருதமுடியாது. எதிரி மீதான குற்றத்தை பொறுத்தவரை எதிரி தான் அதை தன்னிச்சையாக கையூட்டு பணம் என்று தெரிந்து தான் வாங்கினார் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். எதிரியால் பணம் கேட்கப்பட்டு அது சட்ட விரோதமாக வழங்கப்பட்டது என்று நிரூபிக்காத நிலையில் எதிரியிடமிருந்து பணம் கைப்பற்றப்பட்டுள்ளது என்பது மட்டுமே எதிரி மீதான வழக்கை நிரூபித்து விட்டதாக எடுத்துக்கொள்ளமுடியாது. மேலும், இந்த சட்டத்தின் பிரிவு 20-இன் படி ஒரு நபர் சட்டவிரோதமாக பணம் கேட்டு அவ்வாறு பணம் வாங்குவது சட்டவிரோதமானது என்று தெரிந்தே அந்த நபர் அதை வாங்கியுள்ளார் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் ஆரம்ப நிலையிலேயே எதிரி குற்றமற்றவர் என தெரிய வந்ததன் அடிப்படையிலேயே விசாரணை நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்துள்ளது. மேலும், இவ்வழக்கில் முக்கிய சாட்சிகளின் சாட்சியங்களுக்கிடையே கருப்பொருள் முரண்பாடு காணப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பணம் மற்றும் கைபேசியை எதிரி கையூட்டு என்று தெரிந்து தான் பெற்றார் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை. எனவே, தான் விசாரணை நீதிமன்றம் சாத்தியமான பார்வையின் அடிப்படையில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்ததை உயர் நீதிமன்றம் மாற்றி தீர்ப்பளித்துள்ளது. பொதுவாக ஊழல் தடுப்பு சட்டப்பிரிவுகளின் கீழான வழக்கில் தண்டனை வழங்கப்படும் போது சாட்சிகளின் சாட்சியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஒரு முறை ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் ஒரு நபர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு விட்டால் அது அந்த நபருக்கு சமுதாயத்தில்

களங்கத்தை ஏற்படுத்துகிறது. இதைத்தவிர சேவையில் கடுமையான விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். அதே நேரத்தில் விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வை சாத்தியமான பார்வையாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், எந்தவொரு திட்டவட்டமான முன்மொழிவும் இருக்க முடியாது என்பதையும், ஒவ்வொரு வழக்கும், அதன் சொந்த தகுதியின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களை கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 22.09.2020 மற்றும் 29.09.2020-ஆம் தேதியிட்ட குற்றவியல் தீர்ப்புகள் மற்றும் 15.09.2020 மற்றும் 29.09.2020-ஆம் தேதியிட்ட தண்டனை விதிக்கும் உத்தரவுகள் இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன. (பத்தி 12, 14(77-G-H; 78-A-B; 79-E-G; 80-D).

முருகேசன் மற்றும் பலர் -எதிர்- அரசு காவல் ஆய்வாளர் மூலமாக (2012) 10 SCC 383: (2012) 13 SCR 1; சந்திரப்பா மற்றும் பலர் –எதிர்- கர்நாடகா மாநிலம் (2007) 4 SCC 415; (2007) 2 SCR 630; ஹக்கீம் கான் மற்றும் பலர் –எதிர்- மத்திய பிரதேச மாநிலம் (2017) 5 SCC 719; (2017) 2 SCR 735; C.M.கிரிஷ்பாபு –எதிர்- சிபிஐ கொச்சின், கேரளா உயர் நீதிமன்றம், (2009) 3 SCC 779; (2009) 2 SCR 1021; பி. ஜெயராஜ் –எதிர்- ஆந்திர மாநிலம் (2014) 13 SCC 55; (2014) 4 SCR 554 – சார்ந்துள்ளது.

அனில் ராய் மற்றும் பலர் எதிர் பீகார் மாநிலம் (2001) 7 SCC 318; (2001) 1 Suppl. SCR 298 – பரிந்துரைக்கப்பட்டுள்ளது

<u>வழக்கு சட்ட குறிப்பு</u>

(2012) 13 SCR 1 பத்தி 6 - ஐ சார்ந்துள்ளது

(2001) 1 Suppl. SCR 298 பத்தி 6-இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளது

(2007) 2 SCR 630 பத்தி 10 -ஐ சார்ந்துள்ளது

(2017) 2 SCR 735 பத்தி 10-ஐ சார்ந்துள்ளது

(2009) 2 SCR 1021 பத்தி - 12ஐ சார்ந்துள்ளது

(2014) 4 SCR 554 சார்ந்துள்ளது (2021) 2 SCR பத்தி 12

உச்ச நீதிமன்ற அறிக்கைகள் [2021] 2 S.C.R.

[2014] 4 SCR 554 சார்ந்துள்ளது பத்தி **12**

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீட்டு எண். 2021 இன் 100-101

மெட்ராஸ் உயர் நீதிமன்ற மதுரை கிளையின் 22.09.2020 மற்றும் 29.9.2020ம் தேதி Crl.A.(MD) No. 6/2015-ஆல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் பேரில் மேல்முறையீடு.

தரப்பினர்களுக்கான ஆஜரான வழக்கறிஞர்கள் :எஸ். நாகமுத்து, ஜெயந்த் முத்ராஜ், சீனியர் வழக்கறிஞர். எம்.பி. பார்த்திபன், ஏ.எஸ்.வைரவான், சந்தோஷ், முனிபிரபு, ஆர்.சுதாகரன், எம்.யோகேஷ்கண்ணா, ராஜராஜேஷ்வரன், எஸ்.ஆதித்யசதா.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திரு.ஆர்.சுபாஷ் ரெட்டி அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மதுரை ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளின் சிறப்பு நீதிமன்றத்தின் கோப்பில், 2011- ஆம் ஆண்டின் சிறப்பு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 49- இல் குற்றம் சாட்டப்பட்ட ஒரே நபர், 28.08.2020 மற்றும் 22.09.2020 தேதிகளில் ஊழல் தடுப்புச் சட்டம் (இனி "சட்டம்") பிரிவுகள் 7 மற்றும் 13 (2) மற்றும் உ/இ 13 (1) (டி)-இன் கீழான குற்றங்களுக்கு தண்டனை வழங்கி அளித்த தீர்ப்பால் பாதிக்கப்பட்டு, இந்த மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மதுரை உயர்நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட தேதி 15.09.2020 மற்றும் 29.09.2020 ஆகும்.

3. மேல்முறையீடு செய்யப்பட்டவர் மதுரை மாநகராட்சியின் 8வது வார்டில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றி வந்தார். ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவுகள் 7 மற்றும் 13 (2) மற்றும் உ/இ 13 (1) (டி)-இன் கீழான குற்றத்திற்காக அவர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் மேற்பார்வையாளராக பணிபுரியும் அ.சா.2 (திரு. டி. கோபால்) என்பவர் சுத்தமாக மற்றும் சுத்தமான சேவை அணி (என்ஏசிஎஸ்எஸ்) என அழைக்கப்படும், மதுரை மாநகராட்சியின் வார்டு எண்.8-இல் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் வழங்கப்பட்டதற்காக மார்ச் 2003- க்கு அப்பால் பணி நீட்டிப்புக்காக தனது அறிக்கையை அனுப்ப, 2003 அக்டோபர் 09 மற்றும் 10 தேதிகளில் குற்றஞ்சாட்டப்பட்டவரை அ.சா.2 அணுகியபோது, மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் அ.சா.2-இடம் சட்ட விரோதமாக ரூ. 500/- மற்றும் ஒரு கைபேசி, பணம் கேட்டுள்ளார் என்பது தான் அரசுத் தரப்பு வழக்கு. மேலும், பொது ஊழியரான குற்றஞ்சாட்டப்பட்ட நபர் 10.10.2003-ஆம் தேதி மேற்படி சட்டத்திற்கு முரணாக பணம் மற்றும் கைபேசி பெற்றுக்கொண்ட தவறான நடத்தையின் காரணமாக மற்றும் அதிகார துஷ்ப்ரயோகத்திற்காக இவர் மீது ஊழல் தடுப்பு சட்டம் பிரிவுகள் 7 மற்றும் 13(2)-இன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகளை குற்றஞ்சாட்டப்பட்டவர் மறுத்துள்ளார். இந்நிலையில், மேற்கூறிய குற்றங்களுக்காக அவர் மீது குற்றசாட்டுகள் வனையப்பட்டு, குற்றம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தான் குற்றம் செய்யவில்லை என்று மறுத்துள்ளார். எனவே, அவர் மேற்கூறிய குற்றங்களுக்காக சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் போது, அரசு தரப்பில் 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர், அதாவது

அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் 1 முதல் 17 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், வழக்கு சொத்துகளாக சா.பொ.1 முதல் சா.பொ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. எதிர்தரப்பு வாதம் விசாரிக்கப்படவில்லை மற்றும் அ.சா.6 -ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்களை பதிவு செய்து, விசாரணை நீதிமன்றம், 25.02.2014 தேதியிட்ட தீர்ப்பின் மூலம், மேல்முறையீட்டாளரை விடுவித்தது. சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட அரசு தரப்பு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை பெஞ்ச் முன் குற்றவியல் மேல்முறையீடு (எம்டி) எண்.6/2015- ஐ தாக்கல் செய்தது. மேற்படி சென்னை உயர் நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த விடுதலை தீர்ப்பை ரத்து செய்து பிரிவுகள். 7, 13(2) மற்றும் 13(1)(டி)- ஊழல் தடுப்புச் சட்டம் இன் கீழான பிரிவுகளில் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்ப்பளித்தது. மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஒரு வருடம் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ. 5000/- அபராதம் விதித்தது. மேற்படி உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பால் பாதிக்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து ஆஜராகியுள்ளார்.

5. மேல்முறையீட்டு மனுதாரர்/குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் மூத்த வழக்குரைஞர் திரு.நாகமுத்து ஆஜரானார் மற்றும் தமிழ்நாடு மாநிலம் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் ஆஜரானார்.

6. மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் திரு.நாகமுத்து, சாட்சியங்கள் மற்றும் பதிவுகளில் உள்ள மற்ற விஷயங்களைக் கொண்டு, விசாரணை நீதிமன்றம் நியாயமான தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால் உயர்நீதிமன்றம் ஆவணப் பதிவில் உள்ள சான்றுகளை மதிப்பிட்டு, சரியான மற்றும் நியாயமான காரணங்களை பதிவு செய்யாமல் உயர் நீதிமன்றம் மேற்படி விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்துள்ளது என வாதிடப்பட்டது. மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வழக்கறிஞர் **முருகேசன் மற்றும் பலர் –எதிர்- காவல் துறை ஆய்வாளர் மூலமாக அரசு (2012) 10 எஸ்சிசி 383** வழக்கில் தீர்ப்பை மேற்கோள் காட்டி முக்கியமாக விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்பு, பதிவேட்டில் உள்ள சாட்சியங்களைக் கொண்ட ஒரு "சாத்தியமான பார்வை" இருக்கும் போது விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விடுதலை தீர்ப்பை தண்டனை தீர்ப்பாக மாற்றுவதற்கு சரியான காரணத்தை குறிப்பிடாமல் உயர் நீதிமன்றம் இவ்வழக்கில் விடுதலை தீர்ப்பை மாற்றி அளித்துள்ளது. மேலும், இவ்வழக்கில் உயர் நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் சாத்தியமான பார்வை சரியல்ல என்பதற்கான எந்த காரணத்தையும் பதிவு செய்யவில்லை. கருப்பொருள் முரண்பாடுகளை கருத்தில் கொண்டு, விசாரணை நீதிமன்றம் அ.சா.2, 3 மற்றும் அ.சா.5 ஆகியோரின் சாட்சியங்கள் நம்பத்தகுந்தவை அல்ல என்று முடிவு செய்துள்ளது. ஆனால் உயர்நீதிமன்றம், எந்த காரணத்தையும் குறிப்பிடாமல், இந்த சாட்சிகளை நம்பியுள்ளது. அ.சா. 2, 3 மற்றும் அ.சா.5-ஐ நம்பலாம் என்று உயர்நீதிமன்றம் கருதினாலும், இந்த சாட்சிகளை நம்பாமல் விசாரணை நீதிமன்றம் எடுத்த பார்வை "சாத்தியமான பார்வை" அல்ல என்று உயர் நீதிமன்றம் நம்பியிருந்தாலும் கூட விசாரணை நீதிமன்றத்தின் விடுதலை தீர்ப்பில் எந்த காரணத்தையும் குறிப்பிடாமல்,

எந்த பதிவுகளையும் மேற்கொள்ளாமலும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பில் தலையிட்டிருக்கக்கூடாது. மேலும், விசாரணை நீதிமன்றத்தில் உரிய காரணங்கள் மற்றும் பதிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அது தவறு என்றோ அல்லது காரணமற்றவை என்றோ உயர்நீதிமன்றத்தால் சொல்லப்படவில்லை என வாதிடப்பட்டது. மேலும், விசாரணை நீதிமன்றம் வாய் மொழி சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட வகையில் மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் கருப்பொருள் முரண்பாடு இருப்பதாக குறிப்பிட்டுள்ள நிலையில் உயர்நீதிமன்றம் இதை கருத்தில் கொள்ளாமல் எதிரிக்கு தண்டனை வழங்கியுள்ளது என்றும் வாதிடப்பட்டது. மேலும், முதலில் 28.08.2020- ஆம் தேதியிட்ட தீர்ப்பின் மூலம், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் தண்டனையை பிரிவு 13(2) உ/இ 13(1)(டி)-இன் கீழான குற்றத்திற்காக மட்டும் ஓராண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.5000/- அபராதம் செலுத்த 15.09.2020 தேதி உத்தரவிட்டுள்ளது. எவ்வாறாயினும், அதன் பின்னர் மீண்டும் மேல்முறையீடு 22.09.2020 அன்று நீதிமன்றத்தால் "குறிப்பிடப்பட்டதற்காக" என்ற தலைப்பின் கீழ் பட்டியலிடப்பட்டது மற்றும் சட்டத்தின் 7-ஆம் பிரிவின் கீழ் குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை குற்றவாளி என்று தீர்ப்பளித்ததுடன், 29.09.2020-ஆம் தேதி ஊழல் தடுப்பு சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் குற்றத்திற்காக ஓராண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்துள்ளது. மேற்படி 22.09.2020 அன்று வழங்கப்பட்ட தண்டனையின் தீர்ப்பும், 29.9.2020-ஆம் தேதியிட்ட தண்டனை உத்தரவும் கு.வி.மு.ச பிரிவு 362- ஐ மீறுவதாக உள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டனை பதிவு செய்யப்பட்டவுடன், குறிப்பிடப்பட்ட விஷயத்தை பட்டியலிடவோ அல்லது குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை மீண்டும் குற்றவாளியாக்கவோ முடியாது என்று வாதிடப்பட்டது. கடைசியாக குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் இவ்வழக்கின் தீர்ப்பு 17.12.2019 அன்று

பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஆறு மாதங்கள் கால தாமதமாக 28.08.2020அன்று தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது **அனில் ராய் மற்றும் பலர் –எதிர்- பீகார் மாநிலம் (2001) 7 எஸ்சிசி 318** வழக்கில் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பில் உள்ள வழிகாட்டுதல்களை மீறுவதாக உள்ளதாக வாதிடப்பட்டது.

7. மறுபுறம், பிரதிவாதி அரசு சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. எம்.யோகேஷ் கண்ணா, அ.சா.2, 3, 5 மற்றும் அ.சா.11 ஆகியோரின் சாட்சியங்களில் இருந்து, 10.10.2003 அன்று மேல்முறையீட்டு குற்றவாளி ரூ.500/- /- மற்றும் ஒரு கைபேசி கேட்டு பெற்றுக்கொண்டது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று சமர்ப்பித்தார். மேலும், அ.சா.2-இன் விண்ணப்பத்தின் பேரில் ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்காக கையூட்டாக பணம் ரூ.500/- மற்றும் ஒரு கைபேசியை பெற்றுள்ளார் என்றும், ஆனால் விசாரணை நீதிமன்றம் சரியான சாட்சியங்கள் இருந்தும் குற்றவாளியை விடுதலை செய்துள்ளது என்றும், ஆனால் உயர்நீதிமன்றம் சரியாக விசாரணை நீதிமன்றத்தின் விடுதலை தீர்ப்பை ரத்துசெய்து தண்டனை வழங்கியுள்ளது என்றும், எனவே உயர்நீதிமன்ற தீர்ப்பில் தலையிடுவதற்கான முகாந்திரம் இல்லை என்றும், திருத்தப்பட்ட பிரார்த்தனையின் அடிப்படையில், 22.09.2020 -ஆம் தேதியிட்ட தீர்ப்பையும், 29.09.2020 அன்று தண்டனை விதித்த ஊழல் தடுப்பு சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் 13(1)(டி)-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மட்டுமே மேல்முறையீடுதாரர் கேள்வி எழுப்பியுள்ளார். மேற்படி வழக்கில் இருந்த சிறிய முரண்பாடுகளை கவனித்ததன் மூலம் விசாரணை நீதிமன்றம் சாத்தியமான பார்வை என்பதன் அடிப்படையில் குற்றவாளியை விடுதலை செய்துள்ளது. ஆனால் உயர்நீதிமன்றம் மேற்படி வழக்கில் குற்றவாளியை சரியான

முறையில் தண்டித்துள்ளது. மேலும் அதில் தலையிட எந்த காரணமும் இல்லை என வாதிடப்பட்டது.

8. இரு தரப்பிலும் கற்றறிந்த ஆலோசனைகளை கேட்டபின், சிறப்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட தீர்ப்புகள் மற்றும் விடுவிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் பிற வாய்மொழி மற்றும் ஆவண ஆதாரங்களை நாங்கள் கவனமாக ஆராய்ந்தோம்.

9. இந்த மேல்முறையீடுகளில் அ.சா.2 முக்கிய சாட்சியாகவும், புகார் அளித்தவராகவும் இருந்தார் என்பதை கவனிக்க வேண்டும். அ.சா.2 மதுரை மாநகராட்சியின் வார்டு எண்.8-க்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி வழங்கப்பட்ட NACSS என்ற தன்னார்வ சேவையில் மேற்பார்வையாளராக பணியாற்றி வந்துள்ளார். மேல்முறையீட்டாளர் மீது வழக்குத் தொடர அனுமதி வழங்கிய அனுமதி வழங்கும் அதிகாரி அ.சா.1 ஆகவும், புகார்தாரர் திரு டி. கோபால் அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.2, 3, 5 மற்றும் 11 உடன் 10.10.2003 அன்று மாலை 05.30 மணியளவில் குற்றம் சாட்டப்பட்டவரின் அலுவலகத்தை அடைந்ததாகவும், அந்த நேரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் இருக்கையில் காணப்படவில்லை என்றும், அவருக்காக அவர்கள் காத்திருந்ததாகவும், மேல்முறையீட்டாளர் தனது இருசக்கர வாகனத்தில் மாலை 05.45 மணிக்கு அலுவலகத்திற்கு வந்து தனது இருக்கையில் அமர்ந்தார் என்றும், தான் மேல்முறையீட்டு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரை மற்ற சாட்சிகளுடன் சந்தித்தபோது, திரு. சண்முகவேல் மற்றும் மேல்முறையீட்டாளர் திரு. ரவிக்குமரன் கையூட்டு ரூ.500/- மற்றும் கைபேசி கேட்டார் என சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கேட்டதன்

பேரில் பினாப்தலீன் பவுடர் பூசப்பட்ட கரன்சி நோட்டுகள் மற்றும் கைபேசி ஆகியவற்றை குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் ஒப்படைத்ததாகவும் அதை வாங்கிய குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது மேசையில் உள்ள இடது பக்க அறையில் வைத்ததாகவும் கூறியுள்ளார். மேலும், இவ்வழக்கில் அதிகாரபூர்வ சாட்சி திரு. சண்முகவேல் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டார். இவர் தனது சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவரின் அலுவலகத்திற்கு சென்றபோது, குற்றம் சாட்டப்பட்டவர் இருக்கையில் இல்லை என்றும், எனவே தாங்கள் காத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாலை 05:45 மணிக்கு அலுவலகத்திற்கு வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் பல முறை குற்றஞ்சாட்டப்பட்டவரை சந்தித்துள்ளதாகவும், பின்னர் 09.10.2003-ஆம் தேதி அ.சா.5 உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரை சந்தித்ததாகவும், அப்போது தான் குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத்திற்கு முரணாக பணம் மற்றும் கைபேசி கேட்டதாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், தனது குறுக்கு விசாரணையில் அ.சா.2, குற்றம் சாட்டப்பட்டவரை தாம் முன்பு பார்த்ததில்லை என்பதை ஒப்புக்கொண்டார். மேலும் 09.10.2003-ஆம் தேதி முதல் முறையாக பார்த்தபோது தான் தன்னிடம் சட்டத்திற்கு முரணாக பணம் மற்றும் கைபேசி கேட்டார் என்றும் கூறியுள்ளார். மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் தான் தாழ்த்தப்பட்ட சாதி சமூகத்தை சேர்ந்தவர் என்பதால், குற்றம் சாட்டப்பட்டவரால் தான் பலமுறை மோசமாக நடத்தப்பட்டதாகவும் கூறியுள்ளார். அ.சா.2 சாட்சியத்தில் இருந்து மேல்முறையீட்டாளருக்கும் அ.சா.2-க்கும் இடையே சுமூகமான நிலை இல்லை என்பது தெளிவாகிறது. மேலும் அ.சா.2ன் சாட்சியத்திலிருந்து பணம் மற்றும் கைபேசியை ஒப்படைத்துவிட்டு, அவரும் மற்ற சாட்சிகளும் சேர்ந்து குற்றஞ்சாட்டப்பட்டவரின்

அலுவலகத்தை விட்டு வெளியே வந்து காவல் ஆய்வாளரிடம் சமிக்ஞை காட்டினார்கள் என்பதும் அ.சா.2ன் சாட்சியத்திலிருந்து அறிய முடிகிறது. மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் சான்று பொருள் -2 (M.O.2) ஆன கைபேசி வாங்கியது தொடர்பான எந்த விவரமும் தன்னிடம் இல்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். மேற்படி அ.சா.2-இன் சாட்சியத்திலிருந்து எதிரி/மேல்முறையீட்டாளரை மாலை 05.45 மணியிலிருந்து பொறி வைத்து பிடிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் இவ்வழக்கில் பினாப்தலீன் சோதனையானது இரவு 07.00 மணிக்குத்தான் நடத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், இவ்வழக்கில் மாலை 05.45 மணியிலிருந்து 07.00 மணி வரையான காலதாமதத்திற்கான எந்த விளக்கங்களும் இவ்வழக்கில் சாட்சிகளால் அளிக்கப்படவில்லை. நகர சுகாதார உதவி அலுவலகம் மற்றும் மற்ற துறை அலுவலகங்களும், எதிரி/மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தின் அருகிலேயே உள்ளது. மேலும் அ.சா.3 தனது சாட்சியத்தில் லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தனது மேசையின் அறையில் இருந்த பணம் மற்றும் கைபேசியை எடுத்து ஒப்படைத்தார் என்று கூறியுள்ளார். இவ்வழக்கில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வட்ட சுகாதார ஆய்வாளர், மதுரை மாநகராட்சி என்பவர் தனது குறுக்கு விசாரணையில் எதிரி/மேல்முறையீட்டாளர் அலுவலகம் செல்லும் வரை தனக்கு எது பற்றியும் தெரியாது என்றும், பணம் மற்றும் கைபேசி யாரிடமிருந்தது என்பது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். மேலும், இவர் தனது குறுக்கு விசாரணையில் காவல் ஆய்வாளர் கொடுத்த அறிவுரையின் பேரில் தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தன்னிடம் இருந்த பணம் மற்றும் கைபேசியை வெளியே எடுத்தார் என்று கூறியுள்ளார். அ.சா.5-இன் சாட்சியமும் மேற்படி சாட்சியத்தை ஒத்தே

உள்ளது. அ.சா.11 கூடுதல் காவல் கண்காணிப்பாளர், போடிநாயக்கனூர் உட்பிரிவு அவர்கள் இவ்வழக்கில் மற்றொரு முக்கிய சாட்சியாவார். இவர் சம்பவ சமயத்தில் மதுரை ஊழல் மற்றும் லஞ்ச தடுப்பு பிரிவில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியாற்றியுள்ளார். இவர் தனது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளரிடம் சோடியம் கார்பனேட் திரவ சோதனையானது இரவு 07.00 மணிக்கு நடத்தப்பட்டதாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான அ.சா.2,3,5 மற்றும் அ.சா.11 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரி/மேல்முறையீட்டாளரை பிடிக்க பொறி வைத்தது மாலை 5.45 மணி என்றும் ஆனால் மேற்படி சோதனை நடைபெற்றது இரவு 07.00 மணி என்றும் ஒரே மாதிரி சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அ.சா.11 தனது குறுக்கு விசாரணையில் தாங்கள் சம்பவ இடத்தை சுமார் ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே கண்காணிக்க தொடங்கி விட்டதாகவும் எதிரி/மேல்முறையீட்டாளரின் அலுவலகத்தில் இருந்து பல பேர் வருவதும் போவதுமாக இருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அவர் தனது சாட்சியத்தில் பினாப்தலீன் சோதனை நிறைவடைந்த பிறகு ஊழல் கையேடு விதி 47(1) -இன் கீழ் சொல்லப்பட்டவாறு எதிரி/மேல்முறையீட்டாளரிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

மேலும், அ.சா.11 தனது குறுக்கு விசாரணையில் எதிரி/மேல்முறையீட்டாளரிடம் இருந்து பணம் மற்றும் கைபேசி பெறப்பட்ட பிறகு எதிரி/மேல்முறையீட்டாளரின் கைகள் உடனடியாக பரிசோதிக்கப்படவில்லை என்று கூறியுள்ளார். மேலும் அ.சா. 4 மற்றும் அ.சா.11 ஆகியோர் தங்களது சாட்சியங்களில் டி.எல்.ஓ கேட்ட பிறகு தான் எதிரி/மேல்முறையீட்டாளர் தனது மேசையின் இடது அறையில் இருந்த கையூட்டு பணம் மற்றும் கைபேசியை எடுத்துக் கொடுத்தார் என்று கூறியுள்ளார்கள். மேற்படி

சூழ்நிலைகளில் வழக்கின் முக்கிய ஆதாரங்கள் நம்பகமானதாக இல்லாத போது கறை படிந்த பணத்தை மீட்டெடுப்பது மட்டுமே எதிரி/மேல்முறையீட்டாளரை தண்டிப்பதற்கு உகந்ததாக இருக்காது. மேற்படி வழக்கில் கருப்பொருள் தொடர்பான முரண்பாடுகள் சாட்சிகளின் சாட்சியத்திற்கிடையே காணப்படுவதால் சந்தேகத்தின் பலன் எதிரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

10. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆஜரான மூத்த கற்றறிந்த வழக்குரைஞர் திரு. நாகமுத்து தனது வாதத்தில் விசாரணை நீதிமன்றம் சாட்சிகளின் சாட்சியங்கள் அடிப்படையில் சாத்தியமான பார்வையின் கீழ் நியாயமான காரணங்கள் மற்றும் சரியான காரணங்களை பதிவு செய்து சரியான முடிவு செய்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்துள்ளது. கு.வி.மு.ச பிரிவு 378-இன் படி விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டிற்கும், தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டிற்கும் இடையே எந்த வேறுபாடும் இல்லை. **சந்திரப்பா மற்றும் பலர் எதிர் கர்நாடகா மாநிலம் (2007)4 SCC 415** என்ற வழக்கின் முன் தீர்ப்பில் விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டை கையாளும் போது கருத்தில் கொள்ள வேண்டிய சில பொதுவான கொள்கைகளை வகுத்துள்ளது. மேற்படி தீர்ப்பின் 42 வது பாரா பின்வருமாறு கூறுகிறது.

“ 42. மேற்கூறிய முடிவுகளில் இருந்து எங்களின் கருத்தில், விடுதலை உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டை கையாளும் போது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் தொடர்பாக பின்வரும் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன :

(1) ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விடுதலை ஆணை நிறுவப்பட்ட ஆதாரங்களை மறுபரிசீலனை செய்யவும், மதிப்பாய்வு செய்யவும் மற்றும் மறு பரிசீலனை செய்யவும் முழு அதிகாரம் உள்ளது.

2) மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் தங்கள் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் அடிப்படையில் சட்டம் பற்றிய கேள்வி மற்றும் உண்மை பற்றிய கேள்விகளின் அடிப்படையில் தாங்களே இறுதி முடிவை எடுக்கலாம். கு.வி.மு.ச சட்டம் 1973 ஆனது இந்த அதிகாரத்தின் மீது எந்த வரம்பு, கட்டுப்பாடு, நிபந்தனைகளையும் விதிக்கவில்லை.

(3) “கணிசமான மற்றும் கட்டாயமான காரணங்கள்”, “நல்ல மற்றும் போதுமான காரணங்கள்”, “மிகவும் வலுவான சூழ்நிலைகள்”, “சிதைக்கப்பட்ட முடிவுகள்”, “வெளிப்படையான தவறுகள்”, போன்ற பல்வேறு வெளிப்பாடுகள் விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டில், மேல்முறையிட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை குறைக்கும் நோக்கம் கொண்டவை அல்ல. விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டில் மேல்முறையீட்டு நீதிமன்றம், சாட்சியங்களை மறுபரிசீலனை செய்வற்கும், அதன் சொந்த முடிவுக்கு வருவதற்கும், நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைப்பதை விட விடுதலையில் தலையிட மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தயக்கத்தை வலியுறுத்துவதற்கு இத்தகைய சொற்றொடர்கள் "மொழியின் செழுமை" என்ற இயல்பில் உள்ளன.

(4) எவ்வாறாயினும் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக இரட்டை அனுமானம் இருப்பதை மனதில் கொள்ள வேண்டும். முதலாவதாக குற்றவியல் நீதித்துறையின் அடிப்படை கோட்பாட்டின் கீழ் நிரபராதி என்ற அனுமானம் அவருக்கு கிடைக்கிறது. ஒவ்வொரு நபரும் ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாவிட்டால் அவர் நிரபராதி என்று கருதப்படுவார். இரண்டாவதாக குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதியாக விடுவிக்கப்பட்டதால் அவர் குற்றமற்றவர் என்ற அனுமானம், விசாரணை நீதிமன்றத்தால் மேலும் வலுப்படுத்தப்பட்டு மீண்டும் உறுதிபடுத்தப்பட்டு வலுப்படுத்தப்படுகிறது.

(5) பதிவில் உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் இரண்டு நியாயமான முடிவுகள் சாத்தியமானால், மேல்முறையீட்டு நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட விடுதலையை கண்டறிவதை தொந்தரவு செய்யக்கூடாது.

மேலும் மேல்முறையீட்டாளரின் மூத்த வழக்குரைஞர், **முருகேசன்** (மேற்படி) என்ற வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டினார் மற்றும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட விடுதலைக்கு எதிரான மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரங்கள் உள்ளது என்பது கருத்தில் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில், விசாரணை நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட சாத்தியமான பார்வை சாத்தியமில்லாத வழக்குகளில் மட்டுமே, உயர்நீதிமன்றம் தலையிட்டு, தண்டனையிலிருந்து விடுவிப்பை மாற்றியமைக்க முடியும் என்று இந்த நீதிமன்றம் திட்டவட்டமாக கூறுகிறது. மேலும், இம்மேல்முறையீட்டில் "சாத்தியமான பார்வை" என்பதிலிருந்து " பிழையானபார்வை" அல்லது "தவறான பார்வை" என்ற வேறுபாடு

விளக்கப்பட்டுள்ளது. தெளிவான சொற்களில், விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வை "சாத்தியமான பார்வையாக" இருந்தால், தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டதை உயர்நீதிமன்றம் மாற்றக்கூடாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி வழக்கின் 32 முதல் 35 வரையான பத்திகளில் சாத்தியமான பார்வை என்பது தவறிய பார்வை மற்றும் தவறான பார்வையிலிருந்து வேறுபடுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது.

" 32. மேற்கூறிய உண்மைகளில் விசாரணை நீதிமன்றத்தின் பார்வை சாத்தியமான பார்வை இல்லை என்று கூற முடியுமா? பதில் உறுதியானதாக இருந்தால், முன்னர் குறிப்பிடப்பட்ட சட்ட கொள்கைகளின்படி, மேல்முறையீட்டு குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிப்பதில் தலையிட உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு பயன்படுத்தப்பட்டிருக்க கூடாது. வேறு வார்த்தைகளில் கூறுவதனால், கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட முடிவுகள் சாத்தியமான பார்வையை பிரதிபலிக்கவில்லை என்றால் மட்டுமே உயர் நீதிமன்றத்தால் விடுதலையை ரத்து செய்திருக்க முடியும். விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வை சாத்தியமான பார்வையாக இல்லாத சூழ்நிலையில் மட்டுமே தலையிட தடை என்பது உணரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். "சாத்தியமான பார்வை" என்ற வெளிப்பாட்டின் பயன்பாடு தெளிவாக உள்ளது மற்றும் நல்ல காரணங்கள் இல்லாமல் இல்லை. கூறப்பட்ட வெளிப்பாடு "பிழையான பார்வை" அல்லது "தவறான பார்வை" போன்ற வெளிப்பாடுகளுக்கு முரணானது, இது முதலில் பார்க்கையில், அதே அர்த்தத்தை

வெளிப்படுத்துவது போல் தோன்றலாம், இருப்பினும் ஒரு சிறந்த மற்றும் நுட்பமான வேறுபாடு தெளிவாகத் தெரியும்.

33. "பிழையான", "தவறான" மற்றும் "சாத்தியமான" வெளிப்பாடுகள் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியில் பின்வரும் சொற்களில் வரையறுக்கப்பட்டுள்ளன:

"பிழையான - தவறு; தவறான.

தவறான.-(1) சரி அல்லது உண்மை இல்லை, தவறாக.

(2) நியாயமற்ற, நேர்மையற்ற, அல்லது ஒழுக்கக்கேடான.

சாத்தியம்.- (1) இருக்கும், நடப்பது அல்லது அடையக்கூடியது.

(2) அது இருக்கலாம் அல்லது நடக்கலாம், ஆனால் அது நிச்சயமானதாகவோ அல்லது நிகழக்கூடியதாகவோ இல்லை.

34. சாத்தியமான பார்வை என்பது சரியான அல்லது அத்தகைய கருத்தை பொருட்படுத்தாமல் இருக்கக்கூடிய அல்லது உருவாக்கக்கூடிய ஒரு கருத்தை குறிக்கிறது என்பதை நாம் வலியுறுத்துவது அவசியம். படிநிலை கட்டமைப்பில், கீழ்நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட ஒரு பார்வை பிழையானது அல்லது தவறானது என்று ஒரு உயர்நீதிமன்றத்தால் வெறும் கருத்து வேறுபாட்டின் அடிப்படையில் குறிப்பிடப்படலாம். ஆனால், உயர் நீதிமன்றத்தின் அத்தகைய முடிவு, சாத்தியமான பார்வையின் அரங்கிற்கு வெளியே துணை நீதிமன்றத்தின் பார்வையை எடுத்துக் கொள்ளாது. ஒரு நீதிமன்றத்தால் எட்டப்பட்ட எந்தவொரு முடிவும் சரியானதா அல்லது சரியான முடிவாக கருதப்படக்கூடியதா என்பதை உயர் நீதித்துறை அதிகாரம் சரியான முடிவாக கருதும்

அடிப்படையில் சோதிக்கப்பட வேண்டும். மறுபுறம், சாத்தியமான பார்வையானது, உயர் நீதிமன்றத்தால் எங்கு ஒப்பு கொள்ளப்பட்டாலும் இல்லாவிட்டாலும் நியாயமான முறையில் வரக்கூடிய ஒரு முடிவை குறிக்கிறது. இரண்டு சூழ்நிலைகளுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டை மனதில் கொள்ள வேண்டும். விசாரணை நீதிமன்றத்தின் பார்வை நியாயமான முறையில் உருவாக்கப்படும் வரை, விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வைக்கு தடை விதிக்கவோ மாற்றவோ உயர் நீதிமன்றத்தால் முடியாது.

35. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் எந்த அடிப்படையில் இந்த வழக்கில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுவிப்பதற்கான உத்தரவை நிறுவியது என்பது சாத்தியமான பார்வையை தெளிவாக பிரதிபலிக்கிறது. இருப்பினும், அது சரியானது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அது சோதனை அல்ல. மேலும், சாத்தியமான பார்வை மற்றும் அதற்கான காரணங்கள் ஏற்புடையதாக இருக்கும் பட்சத்தில் ஏற்கனவே தொடர்புடைய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதை ஆராய்ந்து, மாற்றியமைக்க கு.வி.மு.ச பிரிவு 378- இன்கீழ் எவ்வித காரணமும் எழவில்லை.

மேலும், **ஹக்கீம் கான் மற்றும் பலர் எதிர் மத்தியபிரதேச மாநிலம்** (2017) 5 SCC 719 என்ற வழக்கில், விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட வழக்குகளில் தலையிடுவதற்கான மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்களை இந்த நீதிமன்றம் பரிசீலித்துள்ளது. அந்த தீர்ப்பில், விசாரணை நீதிமன்றத்தின் "சாத்தியமான பார்வை" உயர் நீதிமன்றத்திற்கு உடன்படவில்லை என்றால், விசாரணை நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய "சாத்தியமான பார்வையை" தடை செய்ய முடியாது. மேலும், விசாரணை நீதிமன்றத்தின் பார்வை நியாயமான முறையில் உருவாகும் வரை, உயர்நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்கிறதா இல்லையா என்பதை பொருட்படுத்தாமல்,

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை இடைநிறுத்த முடியாது மற்றும் விசாரணையின் பார்வையை உயர்நீதிமன்றம் மாற்ற முடியாது. மேற்படி தீர்ப்பின் பத்தி 9 பின்வருமாறு கூறுகிறது:

"9. தரப்பினரின் அறிவுரைகளை கேட்டறிந்த நாங்கள், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு நிரபராதி என்ற முடிவுக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகளை காட்டிலும் மேலானது என்றும், குற்றம் சாட்டப்பட்ட பதினேழு பேரை இதச பிரிவு 302 உ/இ 149 பிரிவுகளின் கீழ் குற்றவாளிகளாக கண்டறிவது பாதுகாப்பானது அல்ல என்றும் நாங்கள் கருதுகிறோம். விசாரணை நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிக முக்கியமான காரணம், ஒரு குளிர்கால மாதத்தில் மாலை 06.30 முதல் 07.00 மணி வரை இருட்டாக இருக்கும் போது பதினேழு நபர்களை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக இருக்கும். இந்த காரணத்துடன், இவ்வழக்கின் ஒரே ஒரு தனிப்பட்ட சாட்சியும் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார். மேலும், இவ்வழக்கில் நேரில் பார்த்த இரண்டு தனிப்பட்ட மற்றும் நேரடி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இதுவே அரசு தரப்பிற்கு மிகப் பெரிய பின்னடைவை உருவாக்கும். இது தவிர, குற்றம் சாட்டப்பட்ட தரப்பினரில் மூன்று பேருக்கு காயங்கள் இருந்தன, அவர்களில் இருவர் மண்டை ஓட்டில் ஆழமான காயங்கள், இருந்தது, இவ்வழக்கில் எதுவும் திட்டமிட்டு செய்யப்படவில்லை என்பதும் மேற்படி சம்பவத்தில் இரண்டு தரப்பிற்குமே காயம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது. பிரதிவாதியின் கற்றறிந்த வழக்குரைஞர் விசாரணை நீதிமன்றம் எல்லை மீறி சென்று, புகார்தாரர் தான் வன்முறையை தூண்டியவர் என்ற தீர்மானித்தது சரியாக இருக்கலாம், இருந்தாலும் விசாரணை நீதிமன்றம் எதிரிகளை விடுதலை செய்தது சரியான முடிவாக

இருப்பதற்கான சாத்தியகூறுகள் உள்ளன என்று கூறியுள்ளார். ஆனால், விசாரணை நீதிமன்றத்தின் இறுதி முடிவானது இந்த வழக்கின் உண்மைகளை பற்றிய ஒரு சாத்தியமான பார்வையாகும். மேலும் தலைமை சர்பன்ச் சற்று தொலைவில் உள்ள நீதிமன்றத்திற்கு கலந்துகொண்டு பின்பு பேருந்தில் சம்பவம் நடந்தபின் வந்தடைந்தார் என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது.

11. மேற்கூறிய கொள்கைகள் மற்றும் வழக்கில் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களை பயன்படுத்துவதன் மூலம், நாம் ஏற்கனவே மேலே கவனித்த மற்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் முரண்பாடுகளை கருத்தில் கொண்டு, அது முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். விடுதலை என்பது ஒரு "சாத்தியமான பார்வை" என்று கூறலாம். மேலும் வகுத்துள்ள விகிதத்தை பயன்படுத்துவதன் மூலம் இந்த நீதிமன்றம் உச்சபட்சமாக கூறப்பட்ட தீர்ப்புகளில், மற்றொரு பார்வை சாத்தியம் என்று கருதினாலும், விடுதலையின் தீர்ப்பில் தலையிடுவதற்கும், குற்றம் சாட்டப்பட்ட குற்றத்திற்காக மேல்முறையீட்டாளரை தண்டிக்கவும் இதில் எந்த அடிப்படையும் இல்லை. மேலும், ஆய்வு அதிகாரி மற்றும் பிற சாட்சிகள், மேல்முறையீட்டு மனுதாரர் அலுவலகத்திற்கு சென்றபோது, மேல்முறையீட்டு மனுதாரர் அலுவலகத்தில் இல்லை, அலுவலகம் திறந்திருந்தது, மக்கள் அலுவலகத்திற்கு உள்ளே செல்வதும் வெளியில் வருவதுமாக இருந்துள்ளார்கள் என்பது சாட்சியங்களில் இருந்து தெளிவாகிறது. மேல்முறையீட்டாளர் அலுவலகத்தில் இருந்து அ.சா.3, 5 மற்றும் அ.சா.11-இன் ஆதாரங்களில் இருந்து பணம் மற்றும் கைபேசி ஆகியவை குற்றஞ்சாட்டப்பட்டவரின் மேசையின் பெட்டகத்தில் இருந்து மேல்முறையீட்டாளரால் எடுக்கப்பட்டன என்பதும்

தெளிவாகிறது. மேலும் மாலை 05:45 மணிக்கு மேல்முறையீட்டாளரிடம் கறை படிந்த நோட்டுகள் மற்றும் கைபேசி கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் இரவு 07:00 மணி வரை அ.சா.11 ஆல் பினாப்தலீன் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை என்பதற்கான எந்த விளக்கமும் இல்லை. மேலும், அ.சா.2-இன் சாட்சியத்தில் கருப்பொருள் முரண்பாடு உள்ளது. மேலும், அ.சா.2 தனது சாட்சியத்தில் தான் மேல்முறையீட்டாளர் மீது விரோதத்தை வளர்த்துக் கொண்டதாகவும், தான் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்பதால் முன்பு குற்றஞ்சாட்டப்பட்டவரால் அவமானப்படுத்தப்பட்டதாகவும் தனது குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். மேலும், கறைபடிந்த நோட்டுகள் மற்றும் கைபேசியை ஒப்படைத்துவிட்டு சுமார் ஒரு மணி நேரம் கழித்து பினாப்தலீன் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது இந்த காலதாமதத்திற்கு அ.சா.11-இடமிருந்து பதில் இல்லை. விசாரணை நீதிமன்றம் அ.சா.2, 3 மற்றும் அ.சா.5- ஐ நம்பவில்லை, பல சரியான மற்றும் நியாயமான காரணங்களை பதிவுசெய்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்துள்ளது. ஆனால், உயர் நீதிமன்றம் சரியான ஆதாரங்களை மதிப்பிடாமல் விசாரணை நீதிமன்றத்தின் விடுதலை தீர்ப்பை ரத்து செய்துள்ளது. மேலும், உயர்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட சாத்தியமான பார்வையா இல்லையா என்பது குறித்து எந்த காரணமும் பதிவு செய்யவில்லை. அ.சா.2, 3, மற்றும் அ.சா.5-இன் சாட்சியங்களை நம்பலாம் என்று உயர்நீதிமன்றம் கருதினாலும், சாட்சிகளை நம்பாத விசாரணை நீதிமன்றத்தின் பார்வை சாத்தியமற்றது என்று கருதப்பட்டாலொழிய, பதிவு செய்யப்பட்ட விடுதலையில் உயர்நீதிமன்றம் தலையிட்டிருக்க கூடாது. இவ்வழக்கில் சாட்சியங்களின் சாட்சியத்தில்

உள்ள கருப்பொருள் முரண்பாடுகள் இருப்பதால் அரசு தரப்பு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என்ற தனது வழக்கை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கவில்லை.

12. குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க வழக்கு சொத்து கைப்பற்றப்படுவது மட்டுமே போதாது. **சி.எம்.கிரிஷ்பாபு எதிர் சிபிஐ கொச்சின் கேரளா** உயர்நீதிமன்றம் (2009) 3 SCC 799 மற்றும் **பி.ஜெயராஜ் எதிர் ஆந்திரபிரதேச மாநிலம்** (2014) 3 SCC 55 என்ற வழக்கின் தீர்ப்புகளில் இருந்து இந்நீதிமன்றம் குறிப்பு எடுக்கிறது ஊழல் தடுப்பு சட்டத்தின், 1988 பிரிவுகள் 7, 13 (1) (டி) (i) மற்றும் (ii) ஆகியவற்றின் கீழ் வழக்கை பரிசீலிக்கும் போது இந்த நீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்புகளில், குற்றச்சாட்டை நிரூபிக்க, குற்றம் சாட்டப்பட்டவர் கையூட்டு என்று தெரிந்தும் தானாக முன்வந்து பணத்தை ஏற்றுக்கொண்டார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது. சட்ட விரோதமாக கேட்டதற்கான ஆதாரம் இல்லாதது மற்றும் வெறும் பணம் வைத்திருப்பது அல்லது மீட்டெடுப்பது மட்டுமே குற்றத்தை நிரூபிக்க போதுமானதாக இருக்காது. மேலும், மேற்படி தீர்ப்பில் மேற்படி சட்டத்தின் பிரிவு 20-இன் கீழ் சட்டத்திற்கு புறம்பாக கையூட்டு பணம் என்று தெரிந்து தான் வாங்கப்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும் என கூறுகிறது. குற்றவியல் நீதித்துறையில் குற்றமற்றவர் என்ற ஆரம்ப அனுமானம், விசாரணை நீதிமன்றத்தால் எதிரி விடுவிக்கப்பட்டதன் மூலம் இரட்டிப்பாகும். **பி.ஜெயராஜ்** (மேற்படி) வழக்கின் தீர்ப்பின் தொடர்புடைய பத்திகள் 7, 8 மற்றும் 9 பின்வருமாறு வாசிக்கப்பட்டது:

"7. இதுவரை கீழ் உள்ள குற்றத்தைப் பொறுத்த வரையில் வெறும் கரன்சி நோட்டுகளை மீட்டெடுப்பது மட்டுமே பிரிவு 7-இன் கீழ் தண்டனைவழங்க போதுமானதாக இருக்காது. குற்றம் சாட்டப்பட்டவர் கையூட்டு என்று தெரிந்தும் தன்னிச்சையாக முன்வந்து பணத்தை ஏற்றுக்கொண்டார் என்பதை நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்ட நிலைப்பாடு இந்த நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சி.எம்.ஷர்மா -எதிர்- ஆந்திர மாநிலம், (2010) 15 SCC 1 : (2013) 2 SCC (Crl) 89) மற்றும் சி.எம்.கிரிஷ்பாபு -எதிர்- சிபிஐ [(2009) 3 SCC 779 : (2009) 2 SCC (Cri) 1] ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தின் மூலம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

8. தற்போதைய வழக்கில், குற்றம்சாட்டப்பட்டவர் கோரிக்கை விடுத்தார் என்பதை புகார்தாரர் நிரூபிக்காததால் மேற்படி புகார்தாரர் தரப்பு சாட்சியம் அரசு வழக்கை ஆதரிக்கவில்லை. புகார்தாரரால் குற்றம் சாட்டப்பட்டவரிடம் பணம் ஒப்படைக்கப்பட்டதாக கூறப்படுவதை நிரூபிக்க அரசுத் தரப்பு வேறு எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை. இவ்வழக்கில் புகார்தாரர், பட்டியல் சாட்சி-9-இடம் கொடுத்த அ.சா.ஆ.11 ஆன புகாரில் கூறியதையே மறுத்து கூறியுள்ளார். மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றத்தை நிரூபிக்க வேறு எந்த ஆதாரமும் இல்லை. அ.சா. 1-இன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.11-இன் உள்ளடக்கங்கள், குற்றம் சாட்டப்பட்டவர் சட்டத்திற்கு முரணாக கேட்டார் என்பதை நிரூபிப்பதற்கு போதுமானதாக இல்லை. எனவே, கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் குற்றம் சாட்டப்பட்டவர் கையூட்டு கோரினார் என்று நிருபணம் செய்தது சரியல்ல என்று இந்த உச்ச நீதிமன்றம்

கருதுகிறது. குற்றம் சாட்டப்பட்டவரிடம் இருந்து கறை படிந்த பணத்தை மீட்பது மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவரின் மீதான குற்றத்தை நிரூபித்து விட்டதாக கருத முடியாது. குற்றஞ்சாட்டப்பட்டவரே தான் கையூட்டு என்று தெரிந்து தான் பெற்றுக் கொண்டேன் என்பதை ஒப்புக் கொள்ளாத நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதாக கருதமுடியாது. மேலும், பிரிவு 7, 13 (1) (டி) (i) மற்றும் (ii) ஆகிய பிரிவுகளில் தண்டிக்க வேண்டுமெனில் பொது ஊழியர் தனது பதவியை முறைகேடு செய்து மதிப்புடைய பொருள்கள் அல்லது பணம் சார்ந்த பலன் ஆகியவற்றை சட்டவிரோத திருப்தி, ஊழல் அல்லது சட்டவிரோத வழிகளை பயன்படுத்தி பெற்றுள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

9. இச்சட்டத்தின் பிரிவு 20-இன் கீழ் அனுமானிக்கப்படும் அனுமானத்தைப் பொறுத்த வரையில், அத்தகைய அனுமானம் பிரிவு 7-இன் கீழ் உள்ள குற்றத்தை பொறுத்தமட்டில் மட்டுமே இருக்க முடியும். மேலும் இச்சட்டத்தின் பிரிவுகள் 13 (1) (டி) (i) மற்றும் (ii)-இன் கீழ் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இச்சட்டத்தின் 20-வது பிரிவின் கீழ் சட்ட விரோதமாக கேட்டதை ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரத்தின் பேரில் மட்டுமே, எந்தவொரு உத்தியோகபூர்வ செயலை செய்ததற்காகவோ அல்லது அதைத் தாங்கி கொண்டதற்காகவோ அத்தகைய மனநிறைவு பெறப்பட்டது என்று அனுமானிக்க முடியும். தேவைக்கான ஆதாரம் இருந்தால் மட்டுமே சட்டவிரோத திருப்தியை ஏற்றுக்கொண்டதற்கான ஆதாரம் பின்பற்றப்படும். தற்போதைய வழக்கில், பிரிவு 20-இன் முதன்மைக் காரணங்களின் கீழான அனுமானம் எதுவும் இல்லை.

இந்த நீதிமன்றத்தின் மேற்கூறிய கருத்து, மேல்முறையீட்டாளரின் வழக்கை முழுமையாக ஆதரிக்கிறது. அரசுத் தரப்பு சார்பில் விசாரிக்கப்பட்ட முக்கிய சாட்சிகளின் வாக்குமூலங்களில் மேலே நாம் கவனித்த முரண்பாடுகளை கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளர் கையூட்டு தொகை மற்றும் கைபேசி ஆகியவற்றை கோருவதும் ஏற்றுக்கொள்வதும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று நாங்கள் கருதுகிறோம். விசாரணை நீதிமன்றத்தால் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய ஆதாரங்களை பதிவு செய்து வைத்திருப்பது "சாத்தியமான பார்வை" ஆகும். எனவே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுவதற்கு ஏற்றது. ஊழல் தடுப்பு சட்டத்தின் விதிகளின் கீழ் தண்டனையை பதிவு செய்வதற்கு முன், நீதிமன்றங்கள் சாட்சியங்களை பரிசீலினை செய்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஊழல் தடுப்பு சட்டத்தின் விதிகளின் கீழ் தண்டனை பதிவு செய்யப்பட்டவுடன் அது சமூகத்தில் உள்ள நபரின் மீது ஒரு சமூக களங்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும், சேவையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. அதே நேரத்தில், விசாரணை நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட பார்வை சாத்தியமான பார்வையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், எந்தவொரு திட்டவட்டமான முன்மொழிவும் இருக்க முடியாது என்பதையும், ஒவ்வொரு வழக்கும் அதன் சொந்த தகுதியின் அடிப்படையில், பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களை கருத்தில் கொண்டு தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

13. 22.09.2020 மற்றும் 29.09.2020- ஆம் தேதியிட்ட ஊழல் தடுப்பு சட்டத்தின் பிரிவு 7-இன் கீழான குற்றத்திற்கான தீர்ப்பும் தண்டனையும் கு.வி.மு.ச பிரிவு 362-க்கு

முரணானது என்று மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்துள்ளார். தகுதியின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் வழக்கில் நாங்கள் உடன்படுவதால், அத்தகைய சிக்கலை தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை. அரசு வழக்கறிஞரின் வாதப்படி மெமோவின் திருத்தப்பட்ட நகலின்படி, மேல்முறையீடுதாரர் 22.09.2020 மற்றும் 29.09.2020 தேதியிட்ட தீர்ப்பு/ஆணையை மட்டுமே சவால் செய்துள்ளார் என்றும், 28.08.2020 -ஆம் தேதியிட்ட உத்தரவின் படி 15.9.2020-ஆம் தேதி வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்புக்கு எந்த சவாலும் இல்லை என்றும் சமர்ப்பித்துள்ளார். ஆனால் அதே நேரத்தில் மேல்முறையீடு செய்தவர், திருத்தம் கோரி இடைக்கால விண்ணப்பத்தை தாக்கல் செய்திருந்தார். அதை இந்த நீதிமன்றம் அனுமதித்துள்ளது. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, திருத்தப்பட்ட மெமோவில், 28.08.2020 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் 15.09.2020 தேதியிட்ட உத்தரவைப் பற்றி மேல்முறையீட்டுதாரர் குறிப்பிடவில்லை என்ற காரணத்தால் மட்டுமே மேல்முறையீடுகளை நிராகரிக்க முடியாது. மேலும், உயர் நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்ட தண்டனையை நிலைநிறுத்த அவரது வழக்கை ஆதரிப்பதற்கு அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் நம்பியிருக்கும் தீர்ப்புகளும் இவ்வழக்கிற்கு உதவாது.

14. மேற்கூறிய காரணங்களுக்காக, இந்த மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன மற்றும் 28.08.2020 மற்றும் 22.09.2020 தேதியிட்ட குற்றவியல் தீர்ப்புகள் மற்றும் 15.09.2020 மற்றும் 29.09.2020 தேதியிட்ட தண்டனை விதிக்கும் உத்தரவுகள் இதன்மூலம் ரத்து செய்யப்படுகின்றன. வேறு வழக்குகள் ஏதேனும் தொடர்பாக காவல்

தேவைப்படாத வகையில் மேல்முறையீட்டாளர் காவலில் இருந்து உடனடியாக விடுவிக்கப்படுவார்.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."